## தேசிய வடிவமைப்பு நிலையம் - 2014

தேசிய வடிவமைப்பு நிலையத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1982 இன் 35 ஆம் இலக்க தேசிய கைப்பணி சபையுடன் இணைந்த அதிகாரச்சட்டத்தின் 84(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிலையத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமை பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிலையத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, தேசிய வடிவமைப்பு நிலையத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் சொத்தொன்று பயன்பாட்டு நிலைமைக்கு உட்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், நிலையத்தினால் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகின்ற ரூபா 12,399,690 தொகையான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபரணங்களுக்காக பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 63,319,323 கிரயத்திலான 07 நிலையான சொத்துக்களின் கணக்குகளின் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 52,212,838 ஆக இருந்தமையால் ரூபா 11,106,485 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன், அவ்வேறுபாடுகளுக்கு காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 371(2) | செயல் நிமித்த கட்டுநிதி வழங்கப்பட்ட செயற்பாடு பூர்த்தியடைந்த உடனேயே தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 11 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 135,215 கூட்டுத்தொகையான முற்பணங்கள் 02 மாதங்கள் முதல் 08 மாதங்கள் வரை தாமதித்து தீர்க்கப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப் பிரமாணம் 396 | வழங்கப்பட்ட போதும் மாற்றப்படாத 06 மாதங்களை விஞ்சிய ரூபா 50,000 பெறுமதியான காசோலையொன்று தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, நிலையத்தின் நிதி விளைவுகள் ரூபா 162,853 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,157,429 ஆக இருந்தமையால் நிதிவிளைவுகளில் ரூபா 3,320,282 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக அரசாங்கத்திடமிருந்து கிடைத்த மீண்டெழும் மானியங்களில் 10 சதவீதமான அதிகரிப்பொன்று தென்பட்ட போதும் ஆளணி வேதனங்கள் ரூபா 4,777,800 ஆலும் பராமரிப்புச் செலவினம் ரூபா1,067,604 ஆலும் அதிகரித்தமை இவ்வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையத்தில் 10 வடிவமைப்பாளர்கள் காணப்படுவதுடன், ஒரு வடிவமைப்பாளர் மாதமொன்றில் குறைந்தது 05 நிர்மாணங்களை மேற்கொள்ள வேண்டுமென இலக்கு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் 690 நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், அதில் 547 வேலைத்தளங்களிற்கும் 113 வெளி கைப்பணியாளர்களுக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்தன. இந்நிர்மாணங்களில் எதனை கைப்பணியாளர்களுக்கு இடையே பிரசித்தப்படுத்துவதற்காக அல்லது பிரபல்யப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்ததா என்பதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான முறையொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் நிர்மாண செய்யப்பட்ட புதிய வடிவமைப்பு எந்தளவு நாட்டிற்கு கிடைத்த பெறுபேற்றின் அளவை அளவிடுவது சிக்கலானதாக காணப்பட்டது.

**(ஆ) பௌதீக முன்னேற்றம்**

வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இலக்கிடப்பட்ட 05 நிகழ்ச்சித்திட்டங்களில் 04 நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து எதிர்பார்த்த இலக்கை நிறைவேற்றுவதற்கு நிலையம் தவறியிருந்தது. விபரங்கள் பின்வருமாறு

| நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயற்பாடுகள் | 2014 ஆம் ஆண்டின் எதிர்பார்த்த இலக்கு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடையபட்ட இலக்கு | அடையப் பெற்ற செயல்முன்னேற்றத்தின் சதவீதம் |
|---|---|---|---|
| | அலகு | அலகு | |
| (i) கைப்பணியாளர் பயிற்சியும் இயலளவு அபிவிருத்தியும் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | உயர் தேசிய வடிவமைப்பு டிப்ளோமா பாடநெறி | 25 | 0 | 0 |
| (ii) | புதிய வடிவமைப்பிற்காக சந்தை மேம்படுத்தல் | 02 | 01 | 50 |
| | புதிய நிர்மாண வியாபாரக் கண்காட்சி | | | |
| | சமர்ப்பிக்கப்பட்ட புதிய ஆக்க சந்தை கண்காட்சி | 600 | 400 | 66 |
| | நலனாளிகளின் எண்ணிக்கை | 75 | 36 | 48 |
| | வடிவமைப்பு நூலகத்திற்காக அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வடிவமைப்பு எண்ணிக்கை | 20 | - | 0 |
| (iii) | தகவல்கள், பின்தொடர் நடவடிக்கைகள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 04 | - | 0 |
| | மூலப்பொருள் மற்றும் மாதிரி செயற்திட்டங்கள் சந்தை பரிசோதனை நிகழ்ச்சித்திட்டங்கள் | 02 | 01 | 50 |
| (iv) | மதியுரை சேவைகள் | | | |
| | நூலக வசதிகள் பெற்றுக் கொண்ட நலனாளிகளின் எண்ணிக்கை | 360 | 111 | 31 |
| | வடிவமைப்பு எண்ணிக்கை தொடர்பான சேவைகள் | 12 | 07 | 58 |

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையம் நடாத்திச் செல்லப்படும் காணி மற்றும் நத்தரம்பொத காணி என்பவற்றை நிலையத்திற்கு கையேற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வங்கிக் கணக்கிற்குரிய வங்கி இணக்கக் கூற்றினை பரிசோதித்த போது 2002 ஆம் ஆண்டில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 21,000 ஆன பணம் கணக்காய்வு திகதி வரை வங்கியில் செலவு வைக்கப்படாதிருந்ததுடன், அத்தொகையை அறவிடுவதற்காக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

ஒரு உத்தியோகத்தருடன் கூடிய உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காக உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்திற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளாதிருந்ததுடன், உள்ளகக் கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 பதவியணியினர் நிர்வாகம்**

நிலையத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 102 ஆகவும் உள்ளவாறான பதவியணியினர் 85 ஆகவும் இருந்ததுடன், பதவியணியில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 20 ஆகவும் மிகைகளின் எண்ணிக்கை 03 ஆகவும் இருந்தன. புதிய பதவியணியினரின் கீழ் நியமிக்கப்படாத 03 அமைய ஊழியர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்குரிய வரைவு நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2015 யூன் 12 ஆந் திகதி மீண்டும் திருத்திய நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்**

நிலையத்தினால் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தாயாரிக்கப்பட்டிருந்த போதிலும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இலக்கிடப்பட்டிருந்த சில பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றுவதற்கு தவறியிருந்ததுடன் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு உட்படாத சம்பிராய ரீதியான பல கிராம செயற்திட்டங்கள் பல வரிசை அமைச்சின் உதவி அடிப்படையில் செயற்படுத்தப்பட்டிருந்தது.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீடுசெய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களிற்கும் செலவினங்களிற்குமிடையே 22 சதவீதம் முதல் 121 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிலையத்தின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக்கள்
(இ) நிதிக் கட்டுப்பாடு